# 19

# ஸீரதுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - I

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா வாழ்வு

மக்காவில் முஸ்லிம்கள் மீதான எதிரிகளின் தொந்தரவுகளும் கொடுமைகளும் அதிகரிக்கத்தொடங்கின. இந்நிலையில் இஸ்லாத்தைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கான பாதுகாப்பான ஓரிடத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதற்கு மிகப் பொருத்தமான இடமாக மதீனாவைத் தெரிவு செய்தார்கள். மதீனா அப்போது 'யஸ்ரிப்' என வழங்கப்பட்டது. எனவே, மக்காவில் இருந்த முஸ்லிம்களைத் தனித்தனியாகவும், குழுக்களாகவும் மதீனா நோக்கி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

இறுதியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் குறைஷிக் காபிர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மக்காவின் தெற்கே அமைந்துள்ள ஸவ்ர் குகையை அடைந்து, அங்கே மூன்று நாட்கள் தங்கி, பின்னர் குபாவுக்கும் அங்கிருந்து மதீனாவுக்கும் பாதுகாப்பாக வந்து சேர்ந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா வாழ்க்கை ஹிஜ்ரத் நிகழ்வோடு ஆரம்பமாகின்றது. இது ''மக்காவில் இருந்த முஸ்லிம்கள் தமது உறவுகளையும், உடைமைகளையும் துறந்து அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் மதீனா சென்று குடியேறியதைக் குறிக்கிறது.'' இந்த ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து மதீனாவில் ஓர் இஸ்லாமிய அரசு உருவானது. ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இந்த ஹிஜ்ரத்தை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய வருடமும் கணிக்கப்படுகின்றது.

### மஸ்ஜிதுன் நபவி நிர்மாணம்

மதீனா சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்கொண்ட பிரதான பணி மஸ்ஜிதுன் நபவியை நிர்மாணித்தமை

ஆகும். தனது ஒட்டகம் போய் அமர்ந்து கொண்ட இடத்தைப் பள்ளிவாசல் நிர்மாணிப்பதற்கான இடமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெரிவுசெய்தார்கள். அவ்விடத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விலைகொடுத்து வாங்கி மிக எளிமையான முறையில் தன் தோழர்களோடு சேர்ந்து அப்பள்ளிவாசலைக் கட்டிமுடித்தார்கள்.

மதீனா சென்ற பின்னர் ஐங்கால ஜமாஅத் - கூட்டுத் தொழுகை முஸ்லிம்கள் மீது விதியாக்கப்பட்டது. பிலால் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அதான் கூறி மக்களை ஐங்காலத் தொழுகைக்காக அழைத்தார்கள்.

மஸ்ஜிதுன் நபவி இஸ்லாமிய சமூகத்தின் மத்திய நிலையமாக இருந்தது. ஜமாஅத் தொழுகைகள் அங்கு நிறைவேற்றப்பட்டன. இதனால் எல்லோரும் ஓரிடத்தில் அடிக்கடி சந்தித்து சுகதுக்கங்களை விசாரித்துக் கொள்ளவழிபிறந்தது. சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நிலையமாகவும் மஸ்ஜிதுன் நபவி செயற்பட்டது. வெளிநாட்டுத் தூதுவர்கள் அங்குதான் வரவேற்று உபசரிக்கப்பட்டனர். வறியோர்கள், அவசரத் தேவையுடையோர்களுக்கு நிவாரணம் வழங்கும் இடமாகவும் அது இருந்தது. அதுமட்டுமன்றி, சமூகத்துக்கு அறிவைப் பரப்பும் கலங்கரை விளக்காகவும் மஸ்ஜிதுன் நபவி விளங்கிற்று. இவ்வாறு பல பணிகளை நிறைவேற்றும் கலாசார நிலையமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிறுவிய பள்ளிவாசல் திகழ்ந்தது.

### முஹாஜிர்களுக்கும் அன்ஸார்களுக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தல்

மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றவர்கள் 'முஹாஜிர்கள்' என்றும் அவர்களை வரவேற்று அடைக்கலம் கொடுத்து உதவிபுரிந்த மதீனா வாசிகள் 'அன்ஸார்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். முஹாஜிர்களுக்கு உதவி ஒத்தாசை புரிவதில் மதீனா முஸ்லிம்கள் தமக்கிடையே போட்டி போட்டுக்கொண்டார்கள். இவர்களைப் பற்றி அல் குர்ஆனும் பாராட்டிப் பேசியுள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா சென்ற பின்னர் முஹாஜிர்களுக்கும் அன்ஸார்களுக்கும் இடையில் உறுதியான சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தினார்கள். இந்த சகோதரத்துவப் பிணைப்பே இஸ்லாம் வளர்வதற்கு அவசியமானது என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உறுதியாக நம்பினார்கள். இதனால் ஏற்கனவே இவர்களுக்கிடையில் இருந்த அன்பும்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

புரிந்துணர்வும் பன்மடங்கு அதிகரித்தன. ஒவ்வொரு முஹாஜிரும் இன்னொரு அன்ஸாரியோடு சகோதரர்களாக இணைத்துவிடப்பட்டனர். இதன்மூலம் மதீனா அன்ஸாரிகள் தம்மிடமிருந்த வீடு, காணி, தொழில் உள்ளிட்ட அனைத்தையும் தம் புதிய சகோதரருக்காகப் பாதி பிரித்துக் கொடுத்தனர். இத்தகைய சகோதரத்துவப் பிணைப்பைப் போன்ற ஒன்றை உலக வரலாறு இதுவரை கண்டதில்லை.

அன்ஸார்கள் அனைத்தையும் பங்குகொடுக்க முன்வந்தபோதும் முஹாஜிர்கள் அவை அனைத்தையும் உடனே பெற்றுக்கொள்வதற்குத் தயங்கினார்கள். தம் சகோதரருக்கு அது சங்கடத்தை ஏற்படுத்தும் என்ற எண்ணமே இவ்வாறு அவர்களைச் செய்யத் தூண்டியது.

ஸஃத் பின் ரபீஉ ரழியல்லாஹு அன்ஹு என்ற அன்ஸாரி தன் முழுச் சொத்தில் பாதியை முஹாஜிர் சகோதரர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முழுமனதோடு கொடுக்க முன்வந்தார்கள். அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘‘தோழரே உங்கள் குடும்பத்துக்கும் செல்வத்துக்கும் அல்லாஹ் என்றும் அருள்புரிவானாக.. எனக்கு நீங்கள் தொழிலில் பாதி தரவேண்டாம். சந்தையைக் காட்டித்தாருங்கள். நான் வியாபாரம் செய்து சம்பாதித்துக்கொள்கின்றேன்’’ எனப் பெருமனதோடு கூறினார்கள். இவர்கள் பிற்காலத்தில் மதீனாவில் பெரும் செல்வந்தர்களில் ஒருவராக மாறினார்கள்.

**பயிற்சி**

1. இஸ்லாமிய வருடக் கணிப்பு எந்த நிகழ்வை வைத்து மேற் கொள்ளப்படுகின்றது?
2. முஹாஜிர், அன்ஸார் எனப்படுவோர் யாவர்?
3. முஸ்லிம்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற தற்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.
4. பள்ளிவாசல் மூலம் சமூகத்தில் எத்தகைய பணிகளைச் செய்ய முடியும் என்பதைக் குறிப்பிடுக.
5. மக்காவாசிகளுடன் மதீனாவாசிகள் நடந்துகொண்ட முறையை முன்வைக்குக.
6. ஹிஜ்ரத்துக்கு முன்னர் மதீனாவுக்கு வழங்கப்பட்ட பெயர் என்ன?